( Chapter XXIII Code of Criminal Procedure.)

-------

IN THE COURT OF **DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, THIRUCHULI**

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | CC 186/2021 |
| Deposition of witness for | : | Pw.1 |
| Name | :: | நாகராஜ் |
| Father's Name | : | பழனியாண்டி |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12 day November of 2021

---

மு.வி

நான் தற்போது ஆத்திபட்டி கிராமத்தில் விசித்து வருகிறேன். ஜெயவிலாஸ் மில்லில் மேலகண்டமங்களத்தில் செக்யூரிட்டியாக பணிபுரிந்து வருகிறேன். நான் இரவு பணியில் வேலையில் இருந்தேன். எனது அண்ணன் அழகர்சாமி பணிகுண்டு ஜெயகிருஷ்ணாமில்லில் இரவு பணியில் வேலையில் இருந்தார். பணி முடித்து காலையில் திரும்பி வரும்போது, பணிகுண்டு ரெங்காடெக்ஸ் மில் மெயில் ரோட்டை கடக்கும் போது, பைக்குகாரர் வந்து அவர் மீது மோதி, விபத்து ஏற்பட்டதாக அங்கு இருந்த நபர்கள் எனக்கு போன் செய்தார்கள். நான் அனுமதி வாங்கி சென்று பார்த்தேன். அவர் நிலை குலைந்து கீழே கிடந்தார். அக்கம் பக்கதினர் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு பலத்த தலைகாம் என்பதால் மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி

வைத்தார்கள். 10 நாள் சிசிச்சை பெற்றும், சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். விபத்தானது எனது அண்ணன் ரோடை கடக்கும்போது, கிழக்கிலிருந்து மேற்கு வந்த பைக்ஓட்டி வந்த நபர் இடித்து ஏற்பட்டது என்று கேள்விபட்டேன். சம்பவத்தில் ஈடுபட்ட நபரை சம்பவத்தன்று, சம்பவ இடத்தில் பார்த்தேன்.தற்போது நீதிமன்றத்தில் உள்ளாரா என்று எனக்கு அடையாளம் தெரியவிலலை. என்னிடம் காட்டப்படும் புகார்மனுவை எனது அண்ணன் விபத்துக்குள்ளான 5 நாட்களுக்கு பிறகு கொடுத்தேன்.அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார்மனு அ.சா.ஆ.1. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அ.த.கு.வி:–

நான் முதல் விசாரணையில் சொன்ன சம்பவத்தில் நான் ,எனது அண்ணனை அழைத்துக் கொண்டு பணிகுண்டு ஜெயகிருஷ்ணாமில்லில் ரோட்டை கடக்கும்போது எனது அண்ணன் மீது எதிரி கவனகுறைவாக, அதிவேகமாக அஜாக்ரதையாக இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தி, அவரது இறப்பிற்கு காரணம் என்றும், எதிரிதான் மேற்படி வாகனத்தை ஓட்டிவந்தார் என்றும் குறிப்பிட்டு போலீசார் புகார் கொடுத்துவிட்டு, போலீசார் விசாரணையிலும் அவ்வாறே சொல்லிவிட்டு,தறபோது எதிரிக்கு பயந்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரயில்ல.

எ.த.குவி

காவல்நிலையத்தில் நான் சொல்ல சொல்ல புகார்மனுவினை போலீசார் எழுதி கொண்டர்கள். போலீசார் எழுதின ஆவணத்தில்தான் கையெப்பம் செய்தேன். அதில் என்னஎழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. விபத்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை.

மறுவிசாரணை

இல்லை.